# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(1998, மே மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


1998, மே மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 10.25 தபாற் செலவு : ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 17/93

### ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு கழகம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி அத்துடன் அதன் குறிக்கோள்களையும், கொண்டுநடாத்தும் நோக்கத்துக் கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங் களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள் களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூக சேவைகள் மன்றத்தில் உறுப்பினர்களாகத் தற்போதுள்ள வர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர் களுமான அத்தகையோரான அத்தகைய ஆட்களும் "ராஜபக்ஷ ஞாபகார்த்த கல்வி, கலாசார, சமூகசேவைகள் மன்றம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை

2 — டீ 041830 — 1,100 (96/09)

கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர் கொண்டு, அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) வீதி அபிவிருத்தி அத்துடன் வீடமைப்புத் திட்டங்கள் என்பனவற்றின் நிறைவேற்றுதலையும், ஆசுபத்திரிகள், அருங்கலை கல்வி நிலையங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற வெகுசன தொடர்புசாதன நிலையங்கள் மற்றும் கல்வி நிலையங்கள், பாடசாலைகள், சமுதாய நிலையங்கள் என்பவற்றை நிர்மாணித்தலையும் மேம்படுத்தலையும், பட்டினங்களினதும், கிராமங்களினதும் அபிவிருத்தி நோக்கத்திற்கான அத்தகைய செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல் ;

(ஆ) வறுமையான நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு, ஒரு தொழிலுக்காக, வாழ்க்கைத் தொழிலுக்காக அல்லது சேவைக்காக ஆயத்தம் செய்வதற்கான, அதைத் தொடங்குவதற்கான அல்லது அதில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அளித்தலும் உடைகளை, அறிவுறுத்தலுக்கான கட்டணங்களை அல்லது வேறு வாழ் வசதிகளை அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதும் ;

(இ) சிசுர கல்வி புலமைப்பரிசில்களைக் கொண்டு நடாத்துதல், கல்வியையும் அறிவையும் முன்னேற்றுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் உதவிப் பணங்கள், புலமைப்பரிசில்கள், பரிசுகள், நன்கொடைகள், நிதியுதவி அத்துடன் வேறுவகையிலான உதவி என்பவற்றை அளித்தல், வழங்குதல் அத்துடன் ஏற்பாடு செய்தல், பாடசாலைகள், நூலகங்கள், பண்பாட்டு நிலையங்கள் என்பவற்றைத் தாபித்தலும் ;

(ஈ) பௌத்த தத்துவத்தையும் வாழ்க்கை முறையையும் பேணிப்பாதுகாத்தலுக்கும் பரப்புவதற்கும் உதவி செய்தலும் ;

(உ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள ஏனைய பௌத்த அமைப்புக்களுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல் ;

(ஊ) இலங்கையின் இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் சார் கல்விப் பாடநெறிகளை நடாத்துதல் ;

(எ) மாணவர்களுக்குச் சிறுகைத்தொழில்களில் பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தலும் அத்துடன் பிரயோசனம் உள்ள குடிமக்களாக நிலைபெறுவதற்கு அவர்களுக்குக் காசாகவோ வேறுவகையாகவோ உதவியளித்தல் ;

(ஏ) அநாதை இல்லங்களையும் வயோதிபர் இல்லங்களையும், கதியற்றோருக்காக நிறுவிக் கொண்டு நடாத்துதலும், சமூக நலன்புரி நிலையங்களை நிறுவுதலும் ;

(ஐ) வறியோர், அநாதைகள் அத்துடன் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு, உடை அத்துடன் உறைவிடங்களை வழங்குதல் ;

(ஒ) பிரிவேனாக்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் வேறு கல்வி நிறுவனங்களை நிறுவிப் புலமைப்பரிசில்களை வழங்குவதன் மூலம் கல்வியை மேம்படுத்துதல் ;

(ஓ) குருடர், ஊமை, செவிடர் மற்றும் அங்கவீனர்களுக்கான நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்தலும், பராமரிப்பு இல்லங்களை அமைத்தலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ள தொண்டர் சேவையாட்களுக்கும் ஏனையோருக்கும் புலமைப்பரிசில்கள் வழங்குவதன் மூலம் காசாக அல்லது வேறுவகையாக உதவியளித்தல் ;

(க) நூலகங்களை நிறுவிக் கொண்டுநடாத்துதல், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவுமலர்கள் மற்றும் வார வெளியீடுகள் முதலியவற்றுக்கு பங்களித்தல் அத்துடன் அவற்றை வெளியிடுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்று வதற்கு உகந்தனவாகக் கருதப்படக்கூடிய வேறு சேவைகளைச் செய்தல் ;

(ங) ராஜபக்ஷ ஞாபகார்த்த ஓய்வு நிறுவனத்தையும் தாவரப் பூங்காவையும் அமைத்துக் கொண்டு நடாத்துதல் ;

(ச) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்து வதற்கான கண்காட்சிகள், சொற்பொழிவுகள், மாநாடுகள், தத்துவக் கருத்தரங்குகள், ஆய்வரங்கு கள், வகுப்புகள், விவாதங்கள், சம்மேளனங்கள், சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது வேறேதேனும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல், முறைப்படுத்தல், ஏற்பாடு செய்தல் அத்துடன் நடாத்துதல் ;

(ஞ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் மன்றங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தலும் கூட்டிணைத்தலும் ;

(ட) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேலெடுத்துச் செல்வதற்காக இலங்கையிலும் வேறெங்கேனும் மாநாடுகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், தொகுதிக் கற்கைகள் அத்துடன் விரிவுரைகள் என்பவற்றுக்கு ஆதரவளித்தலும் அவற்றை நடாத்து தலும் ;

(ண) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்கும் முன்னேற்றுவதற்கும் விரும்பத்தக்கவை எனக்கருதக்கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், செய்தித் தாள்கள் அத்துடன் பருவ இதழ்கள் என்பனவற்றை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ; அத்துடன்

(த) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றை யும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு அவசியமானவாறாக, இடைநேர்விளைவாக அல் லது உகந்தவாறாக இருக்கக்கூடிய அத்தகைய வேறு செயல்களை, அத்துடன் காரியங்களைப் புரிதலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும், கட்டுப்பாடும், நிருவாகமும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய, (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) ஆளும் பேரவையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஆளுநர்களை இப்பேரவை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் அட்டவணையில் பெயர்கள் தரப்பட்டிருக்கும் மன்றத்தினது ஆளும் பேரவையின் உறுப்பினர்களாகவும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கின்றவர்களுமானவர்கள் கூட்டுத்தாபனத்தினது முதலாவது பேரவையின் உறுப்பினர்களாகக் கருதப்படல் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு.

5. (1) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று மன்றத்தின் உறுப்பினரொருவராகவிருக்கும் ஆள் ஒவ்வொருவரினதும் அத்துடன் அதன்பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக அதன் பின்னர் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஆள் ஒவ்வொருவரினதும் பெயர் பொறிக்கப்பட வேண்டிய இடாப்பொன்றைப் பேரவையானது வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

6. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கும் அமைய, கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றிற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(ஆ) நாணயமாற்றுண்டியல்களையும், காசோலைகளையும் வாக்குறுதிப் பத்திரங்களையும், ஏனைய கைமாற்றத்தகு சாதனங்களையும் ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், மாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் அத்துடன் வங்கிக் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப் பேரவை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஈ) ஒப்பப்பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையினவையுமான கொடைகள் என்பவற்றைப் பரிந்து கேட்டலும் பெறுதலும் ;

(உ) எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ஊ) ஏதேனும் நிலஞ்சார் அல்லது ஆள்சார் ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் அத்துடன் வேறு ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல், புரிதல் ; அத்துடன் நிருவகித்தல்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்தலும், பதவி நீக்குதலும் அல்லது பதவி முடிவுறுத்தலும், பேரவையின் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தவாறும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

7. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத் விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் ;

(ஆ) பேரவையைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் பதவி விலகுதல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பேரவை உறுப்பினர்களின் தத்துவங்களும், கடமைகளும், நடத்தையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனமும், பதவிநீக்கமும், தத்துவங்களும், கடமைகளும் பணிகளும், நடத்தையும் ;

(ஈ) பேரவையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களிற் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையிலான அத்துடன் கூட்டுத்தாபனத்திலான உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகுதியீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதவையாகவிராத அளவுக்கு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகள் கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதே போன்ற ஒரு கூட்டத்திலும் அதே முறையிலும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப் போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

8. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் சார்பில் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதற்குமுன் பெறப்பட்ட அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும், பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் கூறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

9. (1) பேரவையானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் பெறப்பட்டுச் செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றித் தகுந்த கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒருதடவையாவது பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

மன்றத்திடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக் களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் அந்த நாளில் மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாப னத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**11.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது குத்தகைச் சாதனத்தின்மீது அல்லது அதன் பயனைக் கொண்டு அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப் பின் மீது அல்லது அதன் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமையவும் அல்லது தொடர்புபட்ட கையாளுகைச் சாதனத்தின் நோக்கங்களுக்காகவும் அதிலுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்களின்மீதும் அதில் அடங்கியுள்ள நிபந்தனைகளுக் காகவும், (நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் தொடர்புபட்ட கையாளுகை சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு எப்போதும் அமைய), அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள, வில்லங்கத்துக்குட் படுத்த அல்லது பொறுப்பிக்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படுதல் வேண்டும்.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பேரவையின் ஓர் உறுப்பினரினதும் செயலாளரினதும் அல்லது பேரவையினால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப் படலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடை யாளமாகச் சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடு தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக்கூடிய அத்தகைய வருடாந்த ஒப்பப்பணத்தை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தினால் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

### அட்டவணை

[பிரிவு 4 (2)]

திரு. சமல் ராஜபக்ஷ — (தலைவர்)
திரு. மகிந்த ராஜபக்ஷ — (உபதலைவர்)
திரு. பெசில் ராஜபக்ஷ —
திரு. கோதாபய ராஜபக்ஷ
திரு. டட்லி ராஜபக்ஷ
திருமதி பிரீதி ராஜபக்ஷ
திருமதி விஜித்ரா ராஜபக்ஷ

திரு. லலித் சந்திரதாச (பொருளாளர்)
திரு. துசித ரணவக்க
திரு. டபிள்யூ. குணசேகர
திரு. யூ. விஜேசிங்க (செயலாளர்)
திருமதி சந்திரா விஜேவர்தன
திருமதி சிரந்தி விக்கிரமசிங்க
திருமதி ரம்யா ஹெட்டி ஆராச்சி
திருமதி அயோமா பீரிஸ்
திருமதி புஸ்பா விக்கிரமசிங்க
திருமதி யத்தித்தர பெரேரா
திரு. சசிந்த குமார ராஜபக்ஷ
திரு. ஸமிந்த புன்சிறி ராஜபக்ஷ
திரு. ஹிமால் ஹெட்டி ஆராச்சி
செல்வி ரங்கனி ஹெட்டி ஆராச்சி
செல்வி தேஜனி ராஜபக்ஷ
திரு. சமிந்த ராஜபக்ஷ
திரு. ஹென்றி திசாநாயக்க
திரு. வர்னன் சமரக்கோன்
திரு. நிஹால் குணசேகர
திரு. என். ரத்னாயக்க
திரு. சரத் அமரவீர
திரு. ஏ. வீரரத்ன
திரு. ஜே. பி. ரத்னாயக்க
திரு. ஜே. அமரவிக்கிரம
திரு. உப்புல் திசாநாயக்க
திரு. விஷ்வ திசாநாயக்க
திரு. உதயங்க வீரதுங்க
செல்வி துலாரி திசாநாயக்க
திரு. கித்சிறி சேபால
திரு. கீர்த்தி திசாநாயக்க
திரு. துஷ்யந்த ரூபசிங்க
திரு. சஞ்சீவ ரூபசிங்க
திரு. ஜாலிய விக்கிரமசிங்க
திரு. அருண குணரத்ன
திரு. எஸ். ஜயசுந்தர
திரு. கே. எம். ஏ. கொடவத்த
திரு. பீ. எச். ஜீ. பிரேமசிறி
திரு. மெண்டிஸ் றோகனதீர
திரு. ரீ. ஜயசிங்க
திரு. லயனல் சரத் எதிரிசிங்க
திரு. டி. சி. எச். சமரசிங்க

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.